பெற்றிருக்கிறார்கள். இந்த இடைக்கால தடை உத்தரவு இருக்கின்ற சமயத்தில் சென்னை உயர் நீதிமன்றத்திலே இந்த வழக்கு நிலுவையிலே இருக்கின்றபோது சேதம் விளைவிக்கின்ற எண்ணத்தோடு அங்கே பணிகள் தொடர்ந்திருந்தாலும்கூட இந்த கோயில்எசனை கிராமத்திலே சுமார் 7 நபர்கள் அந்த இடத்திற்குச் சென்று அங்கே இருக்கின்ற பொருள்களை அப்புறப்படுத்தி அதிலே ஏர் ஓட்டியிருக்கின்ற நிலைமையை உருவாக்கி இருந்தார்கள். அதுசம்பந்தமாக அந்த 7 நபர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை தொடரும் பொருட்டு லால்குடி வட்டம், கள்ளக்குடி காவல் நிலையத்திலே 2-3-1994 அன்று அரியலூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் மூலமாக புகார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் புகாரின் அடிப்படையில் கள்ளக்குடி காவல் நிலையத்திலே 2-3-1994-ந் தேதி அன்று குற்ற எண். 217/ 94-படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 7 நபர்கள் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர் மூலமாகவும் நடவடிக்கை தொடரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல அங்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. இந்த நில ஆயத்திலே மட்டும் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலும் சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கின்ற காரணத்தினாலும் இது சம்பந்தமாக அரசு அதிக கவனம் செலுத்தி இன்றைக்குத் திரும்ப அந்த நிலத்தைப்பெற்று அந்த ஆதிதிராவிடர் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குண்டான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது. இதுசம்பந்தமாக ஆதிதிராவிடர் மக்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் அங்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. விதி 110 ன்-கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு அளித்த விவசாயிகளுக்குக் கூடுதல் கரும்பு விலை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளித்திருக்கிறேன். அவ்வறிக்கையைப் பேரவைக்கு வைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 110-ன் கீழ் 1993-94 ஆம் ஆண்டுக்கு 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளித்த விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை அளிப்பது பற்றிய அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்கிறேன். கடந்த கால அனுபவத்தின்படி கரும்புக்கு மாநில பரிந்துரைகளுக்கு மேலாக கூடுதல் கரும்பு விலை கொடுப்பதினால், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விவசாயிகள் மனம் உவந்து

கரும்பு அளிக்க முன்வந்துள்ளார்கள். மேலும் வெல்லத்தின் விலை அதிக பட்சமாக இருக்கும் காலக்கட்டத்தில் இவ்வாறு கூடுதல் கரும்பு விலை அளிப்பதனால் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் அதிக விஸ்தீரணத்தில் கரும்புப் பயிர் செய்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அளிக்க முன்வருவார்கள் என்பது திண்ணம். இதனால் எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் அதன் முழு அறவைத் திறனுக்கு ஏற்ப வரும் ஆண்டுகளில் வேலைசெய்யும். சர்க்ரை உற்பத்தியும் அதிகரிக்கும். எனவே, சர்க்கரை ஆலைகளுக்கு முழு உற்பத்தித் திறனுக்குத் தேவையான கரும்பு கிடைக்க வழி செய்ய 7 சர்க்கரை ஆலைகளுக்கு அதிக பட்ச கரும்பு விலை 1993-94 ஆம் அறவை ஆண்டுக்கு வழங்குவது அவசியம் ஆகிறது. தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைப்படி 1993-94 ஆம் ஆண்டுக்கு கரும்பு அளித்த 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த பதிவு பெற்ற விவசாயிகளுக்கு ஏற்கனவே அரசு அறிவித்த மாநில அரசின் பரிந்துரைகளுக்கு மேலாக கீழ்க்கண்டவாறு கூடுதல் கரும்பு விலையாக அளிக்க கீழ்க்காணும் 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

* என். பி. கே. ஆர். சர்க்கரை ஆலைக்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 80 ரூபாய் என்றும், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 80 ரூபாய் என்றும் திருத்தணி சர்க்கரை ஆலை திருவாலங்காடிற்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 75 ரூபாயும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை பாலக்கோடு தர்மபுரி மாவட்டத்திற்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 70 ரூபாயும், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை மூங்கில்துரைப்பட்டிற்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 70 ரூபாயாகவும், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை படாளத்திற்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 40 ரூபாய் என்றும், ஆம்பூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை வடபுதுப்பேட்டைக்கு கூடுதல் கரும்பு விலை டன் ஒன்றுக்கு 15 ரூபாய் என கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டிலும் அந்த ஆலைகள் ஈட்டிய லாபத்தை கணக்கில் கொண்டு கூடுதல் கரும்பு விலை கொடுப்பது மரபாகும். இதுபோல் இந்த ஆண்டு 1993-94 ஆம் ஆண்டிற்கான மேற்கண்ட கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அதிக லாபம் ஈட்டியுள்ளதால் கூடுதல் கரும்பு விலையாக டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 15 ரூபாயிலிருந்து அதிகபட்சம் 80 ரூபாயாக வழங்க தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணைக்கு இசைவு அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு இந்த 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் சேர்ந்து 70 ஆயிரம் கரும்பு விவசாயிகள் 15 கோடியே 25 லட்சம் ரூபாய் மொத்த கூடுதல் கரும்பு விலையாகப் பெறுகிறார்கள் என்ற இந்த இனிய செய்தியை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.